**நிகழும் சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 23 ஆம் நாள் (09.11.2023)**
**வியாழக்கிழமை அன்று நாமக்கல் நகராட்சி நகர்மன்ற கூடத்தில் காலை 11.30 மணிக்கு**
**நடைபெற்ற சாதாரண கூட்டப் பொருள்**

**பொருள் எண்.1 :**

நாமக்கல் நகராட்சி ஆணையர் அவர்களின் செப்டம்பர் மற்றும் அக்டோபர் 2023ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். **(ந.க. எண்: 8027/2021 /சி1)**

**தீர்மானம் எண் : 618, பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 2 :**

நாமக்கல் நகராட்சி பொறியாளர் அவர்களின் செப்டம்பர் மற்றும் அக்டோபர் 2023ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். **(ந.க. எண்: 8027/2021 /சி1)**

**தீர்மானம் எண் : 619, பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண். 3 :**

நாமக்கல் நகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் உரிம இனங்களுக்கு கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு நான்காவது அழைப்பாக 26.10.2023 அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது.

| வ. எண். | உரிம இனம் |
|---|---|
| 1. | திருச்செங்கோடு சாலையில் உள்ள தினசரி அங்காடி GI Sheet Shed – I, II, IIIஇல் உள்ள கடைகளுக்கு சுங்கம் வசூல் செய்து கொள்ளும் உரிமம். |
| 2. | திருச்செங்கோடு சாலையில் சந்தை வளாகத்தில் உள்ள நவீன கட்டண கழிப்பிடம் – 1இல் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம். |
| 3. | திருச்செங்கோடு சாலையில் சந்தை வளாகத்தில் உள்ள நவீன கட்டண கழிப்பிடம் – 2இல் கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிமம். |
| 4. | நாமக்கல் நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண். 24 செல்லாண்டியம்மன் கோவில் அருகில் புதியதாக கட்டப்பட்டுள்ள நவீன கட்டண கழிப்பிடத்தில் கட்டணம் வசூல் உரிமை. |
| 5. | திருச்செங்கோடு சாலையில் சந்தை வளாகத்தில் உள்ள RCC அலுவலக கட்டிட உரிமம். |
| 6. | திருச்செங்கோடு சாலையில் சந்தை வளாகத்தில் உள்ள RCC உணவக கட்டிடத்தில் உணவகம் நடத்தி கொள்ளும் உரிமம். |

மேற்கண்ட வரிசை எண்.2,3,4 மற்றும் 6இல் உள்ள இனத்திற்கு வைப்புத் தொகை செலுத்தி ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. மேலும், வரிசை எண்.5இல் உள்ள இனத்திற்கு பொது ஏலம் கோர எவரும் முன்வரவில்லை. இவற்றில் வரிசை எண்.1 இல் உள்ள திருச்செங்கோடு சாலையில் புதியதாக கட்டப்பட்டுள்ள தினசரி சந்தையில் GI Sheet Shed – I, II, III-ல் உள்ள கடைகளுக்கு சுங்கம் வசூல் செய்து கொள்ளும் உரிமத்திற்கு மட்டும் கீழ்க்கண்டவாறு ஏலக்கேள்விகள் கோரப்பட்டது. மேற்கண்ட அனைத்து இனத்திற்கும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் பெறப்படவில்லை.

| வ. எண் | ஏலதாரரின் விபரம் | ஏலத் தொகை (வருடத்திற்கு) ரூ. |
|---|---|---|
| 1 | திரு. மு. துரைமுருகன்,<br>த/பெ. முத்துசாமி,<br>1/76/1, குளத்துப்பாளையம் கரடிப்பட்டி,<br>நாமக்கல். | 1,03,06,500/– |
| 2 | Sri SMT & Co நிர்வாக பங்குதாரர்,<br>திரு. எஸ். முத்துசாமி,<br>4/235–1, எஸ்.எம்.டி காம்ப்ளக்ஸ்<br>உடுப்பம் மெயின் ரோடு, புதன் சந்தை,<br>நாமக்கல். | 1,03,07,000/– |

மேற்கண்ட இரண்டு ஏலக்கேள்விகளில் Sri SMT & Co நிர்வாக பங்குதாரர் திரு. எஸ். முத்துசாமி என்பவர் உயர்ந்த ஏலக்கேள்வியாக ரூ.1,03,07,000/– (ரூபாய் ஒரு கோடியே மூன்று லட்சத்து ஏழாயிரம் மட்டும்) கோரியுள்ளார். மேற்படி இனத்தினை நிர்வாகத்தின் மூலம் வசூல் பணி மேற்கொண்டால் கீழ்கண்டவாறு நிகர வருமானம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.87,85,500/–பெறப்படும்.

| | | |
|---|---|---|
| ஆண்டு வருமானம் | 9x14 அளவுள்ள 102 கடைகளுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.180/– வீதம் தினசரி ரூ.18,360/–ம்,<br>4 1/2 x 9 1/2 அளவுள்ள 180 கடைகளுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.65/– வீதம் தினசரி ரூ.11,700/–<br>(18360+11700 = 30060x365 = ரூ.1,09,71,900)<br>(நகர்மன்ற தீர்மானம் எண்.398, நாள். 30.06.2023) | ஒரு வருடத்திற்கு ரூ.1,09,71,900/– |
| **செலவினங்கள்** | | |
| பணியாளர்களின் ஊதியம் | ரூ.26800x4 = 107200x12 = ரூ.12,86,400<br>(நான்கு நபர்கள்) | ரூ.12,86,400/– |
| ரசீது அச்சு கட்டணம் | ஆண்டு ஒன்றுக்கு | ரூ.1,20,000/– |
| மின் கட்டணம் | ஆண்டு ஒன்றுக்கு சராசரியாக | ரூ.7,80,000/– |
| | ஒருவருடத்திற்கான மொத்த செலவு | **ரூ.21,86,400/–** |
| | ஒருவருடத்திற்கான கட்டண வசூல் மூலம் பெறப்படும் வருமானம் | ரூ.1,09,71,900/– |
| | ஒருவருடத்திற்கான மொத்த செலவு (–) | ரூ.21,86,400/– |
| | ஒருவருடத்திற்கு பெறப்பட்ட நிகர வருமானம் | ரூ.87,85,500/– |

எனவே, நகராட்சிக்கு கிடைக்கும் நிகர இலாபத்தை விட SMT & Co நிர்வாக பங்குதாரர் திரு. முத்துசாமி என்பவர் கோரியுள்ள ஏலக்கேள்வி அதிகமாக உள்ளதால் அதனை ஏற்பது குறித்து மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. SMT & Co, திரு. எஸ். முத்துசாமி, நிர்வாக பங்குதாரர், புதன் சந்தை, நாமக்கல் என்பவரின் உயர்ந்த ஏலக்கேள்வி நகராட்சி நிர்வாகத்தின் மூலமாக மேற்படி இனத்தினை நடத்தும்பட்சத்தில் கிடைக்கும் நிகர இலாபத்தினை விட அதிகமாக உள்ளதாலும், மூன்று முறை பொது ஏலம் கோரியும் வேறு ஒருவரும் ஏலம் கோர எவரும் முன்வராததால் அன்னாரின் உயர்ந்த ஏலக்கேள்வியை மன்றம் ஏற்கலாம்.
2. உரிமம் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு அனுபவித்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி வழங்காத மற்ற இனங்களுக்கு மறு ஏலம் மற்றும் ஒப்புந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2428/2023/அ2)**

**தீர்மானம் எண் : 620, அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 4 :</u>

நாமக்கல் நகராட்சிக்கு சொந்தமான பேருந்துநிலையத்தில் உள்ள நேரம் காப்பாளர் அறை (அம்பாள் உணவக விடுதி மேற்குபுறம் உள்ள நேரம் காப்பாளர் அறை) கடை உரிம இனத்திற்கு ஒன்பது ஆண்டுகளுக்கு உரிமம் அனுபவித்துக்கொள்ள 20.10.2023ஆம் தேதியன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது.

மேற்கண்ட உரிமத்திற்கு ஒப்பந்தப்புள்ளி ஏதும் பெறப்படவில்லை கீழ்காணும் விவரப்படி பொது ஏலம் மட்டும் கோரப்பட்டது.

| வ. எண். | ஏலதாரரின் விபரம் | ஏலத் தொகை ரூ. |
|---|---|---|
| 1 | திரு. ஆர். சின்னுசாமி,<br>த/பெ. ரங்கசாமி,<br>4/543, கொண்டிசெட்டிப்பட்டி,<br>நாமக்கல். | 7250 /–<br>மாதம் ஒன்றிற்கு |

| | | |
|---|---|---|
| 2 | திருமதி. பா. பிரேமா,<br>க/பெ. பாண்டியன்,<br>5/58 ஏ, நரிகுறவர் காலனி,<br>கொண்டிசெட்டிப்பட்டி, நாமக்கல். | 7300 /–<br>மாதம் ஒன்றிற்கு |

மேற்கண்ட கடை உரிமத்திற்கு வரிசை எண். 2இல் உள்ள திருமதி. பா. பிரேமா என்பரின் உயர்ந்த ஏலக்கேள்வி அதிகமாக உள்ளது. எனவே உயர்ந்த ஏலக்கேள்வி ஏற்பது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. பேருந்துநிலையத்தில் உள்ள நேரம் காப்பாளர் அறைக்கு வழிகாட்டு மதிப்பின்படி (Guideline value-2016), மாதம் வாடகையாக ரூ. 5,000/–மாக இருந்தது. தற்போது மேற்படி கடைக்கு ரூ.6,613/– வாடகை பெறப்பட்டது. எனவே வழிகாட்டு மதிப்பின்படி, மாத வாடகை ரூ.6,613/–ஐ விட திருமதி. பா. பிரேமா என்பவர் கோரிய உயர்ந்த ஏலக்கேள்வி தொகை மாதம் ஒன்றுக்கு ரூ.7,300/– அதிகமாக உள்ளதால் மன்றம் ஏற்கலாம்.
2. நகராட்சி வருவாய் இழப்பினை தவிர்க்கும் பொருட்டு மன்ற அனுமதி எதிர் நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று உயர்ந்த ஏலக்கேள்வி கோரிய திருமதி.பா.பிரேமா என்பவருக்கு உரிமத்தை ஒப்படைக்க நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.4922/2022/அ2)**

**தீர்மானம் எண் : 621, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 5 :</u>**

நாமக்கல் நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவின் மூலம் வீடுவீடாக சென்று திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் பரப்புரையாளர் மற்றும் கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் மூலம் பொதுமக்களுக்கு பிளாஸ்டிக் பயன்பாடு தவிர்ப்பது, தொற்று நோய் தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டிய வரி மற்றும் வரியினங்கள் செலுத்துவது தொடர்பான அறிவிப்பு மற்றும் அவசர கால தகவல்களையும் அனைத்து பொதுமக்களிடத்திலும் கொண்டு செல்லுவது மிகவும் சிரமாக உள்ளது. எனவே பொது சுகாதார வாகனங்களில் ஒலிப்பான்கள் பொருத்தி பொதுமக்களுக்கு தகவல்கள் எளிதில் சென்றடைய கீழ்கண்ட வாகனங்களில் ஒலிப்பான்கள் (Amb – MIC – Pendrive) கொள்முதல் செய்து பொருத்தி கொள்ள வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது.

| வ. எண் | வாகனத்தின் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | இலகுரக வாகனம் (LCV) | 34 வண்டிகள் |
| 2 | ஈப்பு (Jeep) | 2 வாகனங்கள் |
| 3 | எடுத்து செல்லக்கூடிய ஒலிப்பான்கள் (Portable MIC Heavy) | 4 எண்ணிக்கை |

எனவே மேற்கண்ட பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.7.00 இலடசத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின்அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 6153/2023/எச்1)**

**தீர்மானம் எண் : 622, அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 6 :</u>**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை கொண்டு அனைத்து வீடுகளில் உட்புற பகுதியில் தொற்று நோய் தடுப்பு பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணியை தொடர்ச்சியாக மேற்கொள்ள கீழ்கண்ட எண்ணிக்கையிலான கையினால் இயக்கப்படும் புகை இயந்திரம் (Hand Fogging Machine) கொள்முதல் செய்ய வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது.

| வ. எண். | இயந்திரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | Hand Fogging Machine | 5 |

எனவே பொது சுகாதார பணிக்கு தேவையான மேற்காணும் புகை இயந்திரம் (Hand Fogging Machine) கொள்முதல் செய்து கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.4.57 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மேற்படி 5 எண்ணிக்கையிலான புகை இயந்திரம் (Hand Fogging Machine) கொள்முதல் செய்து கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.4.57 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம். **(ந.க.எண்.6421/2023/எச்1)**

**தீர்மானம் எண் : 623, அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண். 7 :**

நாமக்கல் நகராட்சி பகுதியில் உள்ள பேருந்து நிலையம், வாரச்சந்தை வளாகம், பொது கழிப்பறை, மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகம் உட்பட அனைத்து அரசு அலுவலக வளாகம் மற்றும் துர்நாற்றம் வீசக்கூடிய இடங்களிலும் கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க கீழ்கண்ட கிருமி நாசினி கொள்முதல் செய்ய வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது.

| வ. எண். | கிருமி நாசினி | கொள்முதல் செய்யவேண்டிய அளவு |
|---|---|---|
| 1 | லெமன் கிராஸ் | 300 லிட்டர் |

எனவே பொது சுகாதார பிரிவு பணிக்கு தேவையான லெமன் கிராஸ் கிருமி நாசினி கொள்முதல் செய்து கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.7.10 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. மேற்படி கிருமி நாசினியினை ஒப்பந்தப்புள்ளி பெற்று கொள்முதல் செய்து கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 7.10 இலட்சத்திற்கு மன்றம் வழங்கலாம்.
2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம். **(ந.க. எண்: 6422/2023 /எச்1)**

**தீர்மானம் எண் : 624, அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண். 8 :**

நாமக்கல் நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்கீழ் ரோஜா நகர், கொசவம்பட்டி, வாரச்சந்தை வளாகம் மற்றும் முதலைப்பட்டி ஆகிய நான்கு இடங்களில் கட்டப்பட்டு செயல்பட்டு வரும் நுண் உரமைக்கும் மையத்தில் உள்ள குப்பைகளை எடையிடும் இயந்திரத்தில் உள்ள பிரிண்டர்கள், கீ போர்டுகள், டிஸ்பிளே மற்றும் ஸ்டிக்கர்களை மாற்றம் செய்ய வேண்டியுள்ளதால், அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ. 75,000/—த்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம். **(ந.க.எண். 6423/2022/எச்1)**

**தீர்மானம் எண் : 625, அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள் எண். 9 :**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தூய்மை பணியாளர்கள் மற்றும் கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்களை கொண்டு அனைத்து வார்டு பகுதியில் தொற்று நோய் தடுப்பு பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்கண்ட பணியை செவ்வனே மேற்கொள்ள கீழ்கண்டவாறு கிருமி நாசினிகள் மற்றும் பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் கொள்முதல் செய்ய வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது.

| வ. எண். | பொருள் விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பிளாக் பெனாயில் | 1000 லிட்டர் |
| 2 | ஹைட்ராலிக் ஆசிட் | 500 லிட்டர் |
| 3 | கையுறை | 5000 எண்ணிக்கை |
| 4 | மாஸ்க் (Once use) | 5000 எண்ணிக்கை |
| 5 | N-95 மாஸ்க் | 200 எண்ணிக்கை |

| | | |
|---|---|---|
| 6 | டார்ச் லைட் | 60 எண்ணிக்கை |
| 7 | 100 லி பிளாஸ்டிக் பக்கெட் மூடியுடன் | 30 எண்ணிக்கை |
| 8 | வடிகட்டி | 50 எண்ணிக்கை |
| 9 | அவுன்ஸ் கிளாஸ் | 50 எண்ணிக்கை |
| 10 | கரண்டி | 50 எண்ணிக்கை |
| 11 | ரவுண்ட்அப் | 100 லிட்டர் |

எனவே பொது சுகாதார பணிக்கு தேவையான மேற்காணும் உபகரணங்கள் மற்றும் கிருமி நாசினிகளை ஒப்பந்தப்புள்ளிகள் மூலம் கொள்முதல் செய்து கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 4.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :**

1. மேற்படி உபகரணங்கள் மற்றும் கிருசி நாசினிகளை கொள்முதல் செய்து கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 4.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க. எண். 6420 /2023 /எச்1)**

**தீர்மானம் எண் : 626, அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 10 :</u>**

நாமக்கல் நகராட்சி பொது சுகாதாரப் பணிக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் கிருமி நாசினிகளை கொள்முதல் செய்யும் பணிகள் ரூ.4,00,000/- செலவினத்தில் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி நாள். 03.10.2023 வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு முதன் முறையாக 20.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண். | பொருட்களின் பட்டியல் | எண்ணிக்கை | ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், நாமக்கல் | | ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன் | |
|---|---|---|---|---|---|---|
| | | | விலை | தொகை ரூ. | விலை | தொகை ரூ. |
| 1 | இலகுரக வாகனம் (LCV) | 34 | 14300 | 486200 | 14278 | 485452 |
| 2 | ஈப்பு (Jeep) | 2 | 14300 | 28600 | 14278 | 28556 |
| 3 | எடுத்து செல்லக்கூடிய ஒலிப்பான்கள் (Portable MIC Heavy) | 4 | 32900 | 131600 | 32804 | 131216 |
| மொத்தம் | | 40 | 61500 | 646400 | 61360 | 645224 |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :-** மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க.எண். 6153/2023/எச்1)**

**தீர்மானம் எண் : 627, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண். 11 :</u>**

நாமக்கல் நகராட்சி பொது சுகாதார பணிக்கு 5 எண்ணிக்கை கொண்ட கையினால் இயக்கப்படும் புகை இயந்திரம் (Hand Fogging Machine) கொள்முதல் செய்யும் பணிக்கு ரூ.4,57,000/- செலவினத்தில் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி நாள். 04.10.2023 வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 20.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், நாமக்கல் – **ரூ. 91,168/- (ஒன்றின் விலை)**
2. ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல் – **ரூ.91,280 /- (ஒன்றின் விலை)**

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :– மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க. எண். 6421/2023/எச்1)**

**தீர்மானம் எண் : 628, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.12 :**

நாமக்கல் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு தேவையான கிருமி நாசினி லெமன் கிராஸ் 300 லிட்டர் சப்ளை செய்யும் பணிக்கு ரூ. 7,10,000/– செலவினத்தில் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி நாள். 04.10.2023 வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 20.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், நாமக்கல் – ரூ. 2,360/– (ஒரு லிட்டருக்கு)
2. ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல் – ரூ.2,336.40 /– (ஒரு லிட்டருக்கு)

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :– மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன், நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க. எண். 6422/2023/எச்1)**

**தீர்மானம் எண் : 629, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.13 :**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட ரோஜா நகர் கொசவம்பட்டி, வாரசந்தை வளாகம், முதலைப்பட்டி ஆகிய நான்கு நுண் உரமாக்கும் மையத்தில் உள்ள எடைப்போடும் இயந்திரத்தினை பழுது நீக்குதல் பணிகளை மேற்கொள்வதற்கு ரூ. 75,000/– செலவினத்தில் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி நாள். 04.10.2023 வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு முதன் முறையாக 20.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், நாமக்கல் – ரூ. 61,714/–
2. ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல் – ரூ. 61,950 /–

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** :– மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 6423/2023/எச்1)**

**தீர்மானம் எண் : 630, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.14 :**

நாமக்கல் நகராட்சி பொது சுகாதாரப் பணிக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் கிருமி நாசினிகளை கொள்முதல் செய்யும் பணிகள் ரூ.4,00,000/– செலவினத்தில் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி நாள். 03.10.2023 வாயிலாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு முதன் முறையாக 20.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண். | பொருட்களின் பட்டியல் | எண்ணிக்கை | ஸ்ரீ அத்தனூர் அம்மன் டிரேடர்ஸ், நாமக்கல் | | ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன் | |
|---|---|---|---|---|---|---|
| | | | விலை | தொகை ரூ. | விலை | தொகை ரூ. |
| 1 | பிளாக் பெனாயில் | 1000 லிட்டர் | 62 | 62000 | 59 | 59000 |
| 2 | ஹைட்ராலிக் ஆசிட் | 500 லிட்டர் | 43 | 21500 | 40.12 | 20060 |
| 3 | கையுறை | 5000 எண்ணிக்கை | 6 | 30000 | 5.60 | 28000 |
| 4 | மாஸ்க் (Once use) | 5000 எண்ணிக்கை | 4.50 | 22500 | 3.99 | 19950 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | N-95 மாஸ்க் | 200 எண்ணிக்கை | 48 | 9600 | 46.20 | 9240 |
| 6 | டார்ச் லைட் | 60 எண்ணிக்கை | 450 | 27000 | 448.40 | 26904 |
| 7 | 100 லி பிளாஸ்டிக் பக்கெட் மூடியுடன் | 30 எண்ணிக்கை | 1420 | 42600 | 1404.20 | 42126 |
| 8 | வடிகட்டி | 50 எண்ணிக்கை | 165 | 8250 | 161.66 | 8083 |
| 9 | அவுன்ஸ் கிளாஸ் | 50 எண்ணிக்கை | 98 | 4900 | 96.76 | 4838 |
| 10 | கரண்டி | 50 எண்ணிக்கை | 185 | 9250 | 180.54 | 9027 |
| 11 | ரவுண்ட்அப் | 100 லிட்டர் | 1310 | 131000 | 1295.64 | 129564 |
| மொத்தம் | | | 3791.50 | 368600 | 3742.11 | 356792 |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> :– மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்த ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேஷன், நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க.எண். 6420/2023/எச்1)**

**தீர்மானம் எண் : 631, அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.15 :</u>

நாமக்கல் நகராட்சியில் கணினி பிரிவில் புள்ளி விவரக்குறிப்பாளராக பணிபுரியும் திரு.சீ.ஜெய்சங்கர் என்பவர் மடிகணினி வாங்க முன்பணம் கோரி விண்ணப்பித்துள்ளார். மேற்படி பணியாளருக்கு முன்பணம் தொகை ரூ.60,000/–ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> : மன்றம் அனுமதி வழங்கலாம். **(ந.க. எண். 5601 /2023/பி1)**

**தீர்மானம் எண் : 632, அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.16 :</u>

நாமக்கல் நகராட்சிக்கு சொந்தமான பேருந்துநிலையத்தில் பேருந்துகள் உள்ளே நுழையும் இடது புறத்தில் நாமக்கல் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தின் மூலமாக அம்மா மருந்தகம் 01.12.2014 முதல் செயல்பட்டு வந்தது. தற்போது மேற்படி அம்மா மருந்தகத்திற்கு வழங்கப்பட்ட 9 ஆண்டு உரிம காலம் 30.11.2023 உடன் முடிவடையவுள்ளது. தற்போது அம்மா மருந்தகத்தை தொடர்ந்து நடத்திக்கொள்ள உரிமம் வழங்க கோரி துணை பதிவாளர், எஸ்.607, நாமக்கல் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் லிட்., திருச்செங்கோடு ரோடு, நாமக்கல் அவர்கள் விண்ணப்பம் வழங்கியுள்ளார். எனவே மேற்படி உரிமத்தினை அடுத்த 9 ஆண்டு காலத்திற்கு அரசு வழிகாட்டு மதிப்பின்படி மாதம் ஒன்றுக்கு வாடகையாக ரூ.11,400/– ஆக நிர்ணயம் செய்து உரிமத்தினை நீடித்து உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதி வழங்கலாம். **(ந.க.எண். 6628/2023/அ2)**

**தீர்மானம் எண் : 633, அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண்.17 :</u>

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பரமத்தி சாலை செலம்பகவுண்டர் பூங்கா அருகில் அமைந்துள்ள பொதுக்கிணற்றில் சுற்றுச்சுவர் மற்றும் மேல் மூடி பழுதடைந்து பொதுமக்களுக்கு ஆபத்தான நிலையில் உள்ளது. மேற்கண்ட திறந்தவெளிக்கிணற்றின் மூலம் அருகில் உள்ள வார்டு பகுதிகளுக்கு தண்ணீர் விநியோகம் செய்யப்பட்டுவருகிறது. எனவே மேற்கண்ட பொதுக்கிணற்றில் மேல்மூடி மற்றும் பக்கவாட்டு சுவர்களை பழுதுபார்த்து சரிசெய்ய வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. எனவே பணியை மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.40இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு :</u>

1. மேற்கண்ட பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதியை மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்: 6088/2023/இ1)**

**தீர்மானம் எண் : 634, அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.18 :</u>**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள காலியிடங்களில் வளர்ந்துள்ள தேவையற்ற புல் மற்றும் செடிகளை வெட்டி அப்புறப்படுத்த கீழ்கண்ட எண்ணிக்கையிலான புல் வெட்டும் கருவிகள் (XTRA POWER BRUSH CUTTER (EMAS)) கொள்முதல் செய்ய வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது.

| வ. எண். | இயந்திரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | XTRA POWER BRUSH CUTTER (EMAS) | 5 |

எனவே பொது சுகாதார பணிக்கு தேவையான மேற்காணும் புல் வெட்டும் கருவிகள் XTRA POWER BRUSH CUTTER (EMAS) கொள்முதல் செய்து கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.50,000/– த்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :**

1. மேற்படி 2 எண்ணிக்கையிலான புல் வெட்டும் கருவிகள் XTRA POWER BRUSH CUTTER (EMAS) கொள்முதல் செய்து கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.50,000/–த்திற்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. பணியின் அவசர அவசயிம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதிப்பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம். **(ந.க. எண்: 6905/2023 /எச்1)**

**தீர்மானம் எண் : 635, அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.19 :</u>**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பரமத்தி சாலை செலம்பகவுண்டர் பூங்கா அருகில் அமைந்துள்ள பொதுக்கிணற்றில் மேல்மூடி மற்றும் பக்கவாட்டு சுவர்கள் பழுதுபார்ப்பு பணி ரூ.9.40 இலட்சம் மதிப்பீட்டில் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதியை பெற்று, மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 20.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. அஞ்சனை கன்ஸ்ட்ரக்சன், நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.10 சதவீதம் குறைவு
2. மூகாம்பிகா கன்ஸ்ட்ரக்சன், நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.12 சதவீதம் அதிகம்

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> :

1. மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விடவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியினைவிடவும் குறைவாக சமர்பித்த அஞ்சனை கன்ஸ்ட்ரக்சன், நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதியை பெற்று மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி சமர்பித்த அஞ்சனை கன்ஸ்ட்ரக்சன், நாமக்கல் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண். 6088 /2023/இ1)**

**தீர்மானம் எண் : 636, அங்கீகரிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.20 :</u>**

நாமக்கல் நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் மலேரியா பிரிவிற்கு Larvicide கழிவுநீர் ஓடைகளுக்கு தெளிக்கக்கூடிய Bacillus Thuringiensis (B.T) பவுடர் மிகக் குறைந்த அளவே உள்ளதால், பொது சுகாதாரத்தின் அத்தியாவசிய அவசியம் கருதி Bacillus Thuringiensis (B.T) பவுடர் 200 கிலோ தமிழ்நாடு மருத்துவ சேவைகள் கழகம் லிமிடேட் நிறுவனத்தால் அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் நேரடியாக கொள்முதல் செய்து கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.3.00 இலடசத்திற்கு பொது நிதியில் மேற்கொள்வதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> : மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 6876/2023/எச்1)**

**தீர்மானம் எண் : 637, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.21 :</u>**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள காலியிடங்களில் வளர்ந்துள்ள தேவையற்ற புல் மற்றும் செடிகளை வெட்டி அப்புறப்படுத்த தேவையான இரண்டு புல் வெட்டும் கருவிகள் XTRA POWER

BRUSH CUTTER (EMAS) கொள்முதல் செய்யும் பணிகள் ரூ.50,000/– செலவினத்தில் மேற்கொள்ள நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்னனுமதி நாள். 27.10.2023 வழங்கப்பட்டு, மேற்கண்ட பணிக்கு முதன் முறையாக 30.10.2023 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| வ. எண். | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | இரண்டு கருவிகளுக்கான தொகை ரூ. (GST 12% உள்பட) |
|---|---|---|
| 1 | Star Bright Agencies,<br>67, Ambiga Layout,<br>New Siddhapudur,<br>Coimbatore – 641 006. | 41,000/– |
| 2 | V.K.M. Agencies,<br>67/72-B, Cuddalaore Main Road,<br>Pudupet, Attur. | 40,000/– |
| 3 | Valarpirai Agencies,<br>35/34, Jettikula Street,<br>Fort Main Road,<br>Namakkal -637 001 | 36,000/– |

மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மேற்கண்டவாறு பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி சமர்ப்பித்த Valarpirai Agencies, நாமக்கல் நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க.எண். 6905/2023/எச்1)**

**தீர்மானம் எண் : 638, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.22 :**

நாமக்கல் நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் இயங்கிவரும் 120ஹெச்.பி மோட்டாரின் பம்புசெட் பழுதுபார்ப்பு பணி ரூ.6.00 இலட்சம் மதிப்பீட்டில் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.575, நாள்.29.09.2023 வாயிலாக மன்ற அனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 20.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. திரு.கே.ஜி. சீனிவாசன், நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.02 சதவீதம் குறைவு
2. திரு. டி. இளங்கோவன், நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 1.45 சதவீதம் அதிகம்

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விடவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியினைவிடவும் குறைவாக சமர்ப்பித்த திரு.கே.ஜி.சீனிவாகன், அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க. எண். 5552 /2023 /இ1)**

**தீர்மானம் எண் : 639, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.23 :**

நாமக்கல் நகராட்சிக்கு சொந்தமான துறையூர் சாலையில் அமைந்துள்ள பாவலர் முத்துசாமி திருமண மண்டபத்தில் சமையல்கூடம் மற்றும் உணவு அருந்தும் இடங்களில் பராமரிப்பு பணி ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.588, நாள்.29.09.2023 வாயிலாக மன்ற அனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 20.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. திரு. டி. இளங்கோவன், நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.04 சதவீதம் குறைவு
2. திரு.கே.ஜி. சீனிவாசன், நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 5.30 சதவீதம் அதிகம்

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விடவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியினைவிடவும் குறைவாக சமர்ப்பித்த திரு.டி.இளங்கோவன், நாமக்கல் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க. எண்.4810 /2023 /இ1)**

**தீர்மானம் எண் : 640, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.24 :**

நாமக்கல் நகராட்சிக்கு சொந்தமான கோட்டை துவக்கப்பள்ளியில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.613, நாள்.29.09.2023 வாயிலாக மன்ற அனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 20.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. திரு. வி. பாண்டியன், நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.07 சதவீதம் குறைவு
2. திரு.கே.ஜி. சீனிவாசன், நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 4.27 சதவீதம் அதிகம்

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விடவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியினைவிடவும் குறைவாக சமர்ப்பித்த திரு.வி.பாண்டியன், நாமக்கல் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க. எண். 6053 /2023 /இ1)**

**தீர்மானம் எண் : 641, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.25 :**

நாமக்கல் நகராட்சிக்கு சொந்தமான கோட்டை உயர்நிலைப்பள்ளியில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.612, நாள்.29.09.2023 வாயிலாக மன்ற அனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 20.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. திரு. டி. இளங்கோவன், நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 3.48 சதவீதம் குறைவு
2. திரு.கே.ஜி. சீனிவாசன், நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.03 சதவீதம் அதிகம்

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விடவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியினைவிடவும் குறைவாக சமர்ப்பித்த திரு.டி. இளங்கோவன், நாமக்கல் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க.எண். 6054 /2023 /இ1)**

**தீர்மானம் எண் : 642, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.26 :**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பேருந்து நிலையம் எதிரில் அமைந்துள்ள கமலாலய குளத்தின் உபரிநீர் வெளியேற தரையில் இருபுறமும் வால்வு சேம்பர் அமைத்து DI குழாய்கள் பொதுத்தும் பணி ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.592, நாள்.29.09.2023 வாயிலாக மன்ற அனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 20.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. SS Infra, நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.11 சதவீதம் குறைவு
2. SS Construction, நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.13 சதவீதம் அதிகம்

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** : மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விடவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியினைவிடவும் குறைவாக சமர்ப்பித்த SS Infra, நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க.எண். 5981 /2023 /இ1)**

**தீர்மானம் எண் : 643, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.27 :**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.36 அசோக் நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் பராமரிப்பு பணி ரூ.4.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.614, நாள்.29.09.2023 வாயிலாக மன்ற அனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 20.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. SS Infra, நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.11 சதவீதம் குறைவு
2. SS Construction, நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.13 சதவீதம் அதிகம்

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> : மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விடவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியினைவிடவும் குறைவாக சமர்ப்பித்த SS Infra, நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க. எண்.6052 /2023/இ1)**

**தீர்மானம் எண் : 644, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.28 :</u>**

நாமக்கல் நகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் மற்றும் ஆழ்துளை கிணறுகளை ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை கொண்டு இயக்கும் பணி ரூ.9.70 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.593, நாள்.29.09.2023 வாயிலாக மன்ற அனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 20.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. JP Construction, நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.20 சதவீதம் குறைவு
2. Tamil Nadu Watter Supplys & Drainage System, நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.60 சதவீதம் அதிகம்

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> : மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விடவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியினைவிடவும் குறைவாக சமர்ப்பித்த JP Construction, நாமக்கல் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க.எண். 5985 /2023 /இ1)**

**தீர்மானம் எண் : 645, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.29 :</u>**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22 காவேட்டிப்பட்டி பகுதியில் உள்ள 4 திறந்தவெளிக்கிணறுகளில் இரும்பிலான மூடிகள் அமைத்து பராமரிப்பு பணி ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.565, நாள்.31.08.2023 வாயிலாக மன்ற அனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 18.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. திரு. எஸ். ஸ்ரீதர்மூர்த்தி, நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.32 சதவீதம் குறைவு
2. MPS Engineering Construction, நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.30 சதவீதம் அதிகம்

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> : மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விடவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியினைவிடவும் குறைவாக சமர்ப்பித்த திரு. எஸ். ஸ்ரீதர்மூர்த்தி, நாமக்கல் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க. எண். 5399/2023 /இ1)**

**தீர்மானம் எண் : 646, அனுமதிக்கப்பட்டது.**

**<u>பொருள் எண்.30 :</u>**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9 சின்னஅய்யம்பாளையம் ஆதிதிராவிடர் காலனி பகுதியில் உள்ள மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் பராமரிப்பு பணி ரூ.2.50 இலட்சம் மதிப்பீட்டில் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள நகர்மன்ற தீர்மானம் எண்.552, நாள்.31.08.2023 வாயிலாக மன்ற அனுமதி பெறப்பட்டு, மேற்கண்ட பணிக்கு முதல் முறையாக 18.10.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. திரு. பி. அழகிரி, நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.11 சதவீதம் குறைவு
2. திரு. பி. மாணிக்கம், நாமக்கல் – மதிப்பீட்டிற்கு 0.26 சதவீதம் அதிகம்

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> : மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விடவும் மற்ற ஒப்பந்தப்புள்ளியினைவிடவும் குறைவாக சமர்ப்பித்த திரு.பி.அழகிரி, நாமக்கல் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம். **(ந.க. எண். 5329/2023 /இ1)**

**தீர்மானம் எண் : 647, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண். 31 :**

நாமக்கல் நகராட்சி அலுவலகத்தில் அனைத்து பிரிவுகளிலும் பயன்படுத்தப்படும் ஜெராக்ஸ் வசதியுடன் கூடிய பிரிண்டர்களுக்கும் சிறிய வகை பிரிண்டர்களுக்கும் தேவையான டோனர்கள் கொள்முதல் செய்ய வேண்டியதும் சிறு பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டியதும் அத்தியாவசியமாக உள்ளது. மேற்கண்ட பணியை மேற்கொள்ள தேவைப்படும் உத்தேச செலவினம் ரூ.2.30இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மேற்கண்ட பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்: 6903/2023/இ1)**

**தீர்மானம் எண் : 648, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.32 :**

நாமக்கல் நகராட்சி அலுவலக கனிணி பிரிவில் 2013ஆம் ஆண்டு கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுவரும் 2மடிக்கனிணிகளில் ஏற்பட்டுள்ள சிறு பழுதுகளை சரிசெய்ய வேண்டியது அத்தியாவசியமாக உள்ளது. மேற்கண்ட பணியை ரூ.40,000/–செலவினத்தில் உள்ளூர் விலைப்புள்ளிகள் பெற்று மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** மற்கண்ட பணியை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்: 6904/2023/இ1)**

**தீர்மானம் எண் : 649, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.33 :**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட தும்மங்குறிச்சி கிராமம், சர்வே எண். 63/4, 5A, 5C மற்றும் 6இல் 1.41¾ ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி கோரி திருமதி. A.சபீனா (எ) ரஹமத்துன்னிசா என்பவர் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களுக்கு நேரடியாக விண்ணப்பித்ததின் அடிப்படையில், நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் ந.க.எண். NKL/QONCUXUB/11545/2023/TCP, நாள்.28.07.2023ஆம் தேதிய கடிதத்தில், மனைப்பிரிவின் வரைபடத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்களை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து இறுதி ஒப்புதல் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மனைப்பிரிவிற்கான மூன்றாம் நபரின் தர ஆய்வு செய்து (Third Party Inspection ) சான்றின் அடிப்படையிலும், மேற்படி இடத்தில் சாலை வசதிகள், குடிநீர் பகிர்மான குழாய் வசதி, பாதாள சாக்கடை வசதி மற்றும் மழைநீர் வடிகால் வசதிகள் செய்யப்பட்டுள்ளது எனவும், இதனை நகராட்சி பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ளலாம் எனவும் பொறியாளர் அவர்களால் தெரிவித்துள்ளதின்படி, மனைப்பிரிவு சாலைகள் ஒப்படைத்ததை ஏற்கலாம். பொது ஒதுக்கீடு இடத்திற்கான 10% தொகையினை நகர் ஊரமைப்பு துறைக்கு செலுத்தப்பட்டுள்ளது. சாலைகள் 02.08.2023ஆம் தேதிய தானபத்திரம் எண்.3328இன் மூலம் நகராட்சிக்கு தானம் செய்யப்பட்டுள்ளது. மேலும், மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்குவதற்கு மனுதாரர் நகராட்சிக்கு கீழ்க்கண்ட விவரப்படியான தொகைகள் செலுத்தப்பட வேண்டும்.

| வ.எண். | கட்டண விவரங்கள் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | மனைப்பிரிவு கட்டணம் (1.41¾) ஏக்கர் | ரூ. 25,000/– |
| 2 | அபிவிருத்திக் கட்டணம் | ரூ. 12,500/– |
| 3 | கூர்ந்தாய்வு கட்டணம் | ரூ.1000/– |
| 4 | கட்டிட இடிபாடுகள் கட்டணம் (C&D Waste ) | ரூ.2,000/– |
| 5 | சந்தை மதிப்பு கட்டணம் 3% | ரூ.93,720/– |
| 6 | மனைப்பிரிவு பராமரிப்பு கட்டணம் | ரூ. 1,50,000/– |
| | **மொத்தம்** | **ரூ.2,84,220/–** |

அதன் அடிப்படையில், மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் வடிகால்கள் நகராட்சிக்கு தானமாக ஒப்படைத்ததை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. சாலைகள் தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டதன் அடிப்படையில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், நாமக்கல் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். NKL/QONCUXUB/11545/2023/TCP, நாள்.28.07.2023இல் மனைப்பிரிவிற்கு

தொழில்நுட்ப அனுமதி வழங்கி மனைப்பிரிவு வரைபடத்திற்கு SWP/DTCP/NAMAKKAL/LAYOUT NO.279/2023 என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மனுதாரர் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12843/2022/டிபி1, நாள்.20.10.2022இன்படி, மனைப்பிரிவிற்கான சந்தை மதிப்பு கட்டணம் 3%, பராமரிப்பு கட்டண வைப்புத் தொகை மற்றும் மனைப்பிரிவு அனுமதிக் கட்டணத் தொகைகளை செலுத்திய பின்பு இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :**

1. தானபத்திரத்தின்படி சாலைகள் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதையும் மற்றும் பொது இட ஒதுக்கீடுக்கான 10% தொகையினை நகர் ஊரமைப்பு துறைக்கு செலுத்தியுள்ளதையும் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.
2. மனுதாரர் பராமரிப்பு வைப்புத் தொகை, சந்தை மதிப்பு கட்டணம் 3% மற்றும் மனைப்பிரிவு அனுமதிக் கட்டணத் தொகைகளையும் நகராட்சிக்கு செலுத்திய பின்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம். **(ந.க.எண்.6549/2023/எப்1)**

**தீர்மானம் எண் : 650, அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.34 :**

நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட பெரியப்பட்டி கிராமம், சர்வே எண். 7/1A1இல் 2.01 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு அனுமதி கோரி திருமதி. ர.கலாவதி, திருமதி.கே.எஸ்.யுகப்பிரியா, திரு.ஓ.மாயவன் மற்றும் திரு.மா.பழனிசாமி ஆகியோர் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களுக்கு நேரடியாக விண்ணப்பித்ததின் அடிப்படையில், நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் ந.க.எண். NKL/KVOMPUKS/6267/202/TCP, நாள்.21.03.2023ஆம் தேதிய கடிதத்தில், மனைப்பிரிவின் வரைபடத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்பட்டு சாலைகள் மற்றும் பொது உபயோக இடங்களை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டதைத் தொடர்ந்து இறுதி ஒப்புதல் வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மனைப்பிரிவிற்கான மூன்றாம் நபரின் தர ஆய்வு செய்து (Third Party Inspection ) சான்றின் அடிப்படையிலும், மேற்படி இடத்தில் சாலை வசதி மற்றும் மழைநீர் வடிகால் வசதிகள் செய்யப்பட்டுள்ளது எனவும், இதனை நகராட்சி பராமரிப்பிற்கு எடுத்துக் கொள்ளலாம் எனவும் பொறியாளர் அவர்களால் தெரிவித்துள்ளதின்படி, மனைப்பிரிவு சாலைகள் ஒப்படைத்ததை ஏற்கலாம். பொது ஒதுக்கீடு இடத்திற்கான 10% தொகையினை நகர் ஊரமைப்பு துறைக்கு செலுத்தப்பட்டுள்ளது. சாலைகள் 21.02.2023ஆம் தேதிய தானபத்திரம் எண்.846இன் மூலம் நகராட்சிக்கு தானம் செய்யப்பட்டுள்ளது. குடிநீர் வசதி செய்வதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.3,60,000/–யும் மற்றும் தெருவிளக்கு அமைப்பதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ. 4,25,000/–யும் மனுதாரர் நகராட்சிக்கு செலுத்த வேண்டும் என நகராட்சி பொறியாளர் அவர்கள் வழங்கிய குறிப்பின் அடிப்படையில், மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்குவதற்கு மனுதாரர் கீழ்க்கண்ட விவரப்படியான தொகைகளை நகராட்சிக்கு செலுத்தப்பட வேண்டும்.

| வ.எண். | கட்டண விவரங்கள் | தொகை (ரூ.) |
|---|---|---|
| 1 | தெருவிளக்கு கட்டணம் | ரூ.4,25,000/– |
| 2 | குடிநீர் பகிர்மான குழாய் அமைத்தல் | ரூ.3,60,000/– |
| 3 | மனைப்பிரிவு கட்டணம் (1.41¾) ஏக்கர் | ரூ. 30,000/– |
| 4 | அபிவிருத்திக் கட்டணம் | ரூ. 15,000/– |
| 5 | கூர்ந்தாய்வு கட்டணம் | ரூ. 1000/– |
| 6 | கட்டிட இடிபாடுகள் கட்டணம் (C&D Waste ) | ரூ. 2,000/– |
| 7 | சந்தை மதிப்பு கட்டணம் 3% | ரூ.1,26,630/– |
| 8 | மனைப்பிரிவு பராமரிப்பு கட்டணம் | ரூ. 2,10,000/– |
| | **மொத்தம்** | **ரூ.11,69,630/–** |

அதன் அடிப்படையில், மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் வடிகால்கள் நகராட்சிக்கு தானமாக ஒப்படைத்ததை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. சாலைகள் தானமாக ஒப்படைப்பு செய்யப்பட்டதன் அடிப்படையில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், நாமக்கல் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண். NKL/KVOMPUKS/6267/202/TCP, நாள்.21.03.2023இல் மனைப்பிரிவிற்கு

தொழில்நுட்ப அனுமதி வழங்கி மனைப்பிரிவு வரைபடத்திற்கு SWP/DTCP/NAMAKKAL/LAYOUT NO.89/2023 என எண்ணிட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே, மனுதாரர் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 12843/2022/டிபி1, நாள்.20.10.2022இன்படி, மனைப்பிரிவிற்கான சந்தை மதிப்பு கட்டணம் 3%, பராமரிப்பு கட்டண வைப்புத் தொகை மற்றும் மனைப்பிரிவு அனுமதிக் கட்டணத் தொகைகளை செலுத்திய பின்பு இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு :

1. தானபத்திரத்தின்படி சாலைகள் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளதையும் மற்றும் பொது இட ஒதுக்கீடுக்கான 10% தொகையினை நகர் ஊரமைப்பு துறைக்கு செலுத்தியுள்ளதையும் மன்றம் ஏற்றுக்கொள்ளலாம்.
2. மனுதாரர் பராமரிப்பு வைப்புத் தொகை, சந்தை மதிப்பு கட்டணம் 3% மற்றும் மனைப்பிரிவு அனுமதிக் கட்டணத் தொகைகளையும் நகராட்சிக்கு செலுத்திய பின்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கலாம். **(ந.க.எண்.5837/2023/எப்1)**

**தீர்மானம் எண் : 651, அனுமதிக்கப்பட்டது.**

**ஆணையாளர்,**
**நாமக்கல் நகராட்சி.**